**வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 - 2015**

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) மற்றும் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் (சீடீபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 மார்ச் 31 ஆந் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. 619.72 கிலோமீற்றர் ஆன முன்னுரிமை வீதிகளினை முன்னேற்றம் மற்றும் புனரமைப்பு செயற்திட்டத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 61,438 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 556 மில்லியனானதுடன் இதில் ரூபா 55,250 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 யூன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 யூன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், கடன் செல்லுபடிக் காலப்பகுதி கடனளிப்பு முடியும் வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்.

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்.

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்.

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கபட்டிருந்தனவா என்பதும்.

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,980 மில்லியன் தொகையொன்று கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதிகள் மற்றும் பாலங்களின் புனரமைப்பு வேலைகள் ரூபா 71,055 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த பூர்த்தியடைந்த வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை வேலையாக தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீடிபீ | 500 | 55,250 | 13,753.00 | 103.10 | 13,752 | 490.18 | 63,080 |
| இலங்கை அரசாங்கம் | 56 | 6,188 | 900.44 | - | 852 | - | 7,002 |
| **மொத்தம்** | **556** | **61,438** | **14,653.44** | **103.10** | **14,604** | **490.18** | **70,082** |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

செயற்திட்ட ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமையொன்று அடிப்படையில் 02 மேம்பாலங்கள் மற்றும் 46 பாலங்களின் அகலமாக்கல் மற்றும் மீள்நிர்மாணம், நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள 504.8 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 85.01 கிலோமீற்றர் மாகாண வீதிகளின் புனரமைப்புக்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 வரை 532.41 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 97.30 கிலோமீற்றர் மாகாண வீதிகள், 02 மேம்பாலங்கள் மற்றும் 71 பாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ரூபா 500 மில்லியன் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளினை மிகைந்து ரூபா 1,532 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர்கள் 10.63 மில்லியன் மேலதிக கோரிக்கையினை ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்தனர்.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பொதுவான அம்சமொன்றாக, ஒப்பந்தத்தின் கீழ் வேலைகளின் பரப்பெல்லை விதிகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு வழங்கப்பட்டதுடன் கருதுகோள் வடிவமைப்புக்களின் அடிப்படையில் தொடர்புடைய வேலைகளின் தீர்மானமொன்றின் விளைவாக அவற்றின் மீதான மதிப்பிடப்பட்ட கிரயம் தொடர்ச்சியாக மாற்றப்பட்டிருந்தது. தெரிவு பரிட்சிப்பில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

(அ) தென்னகும்புர – ரிஹில்லகஸ்கட – ராகல வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,307 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் பின்னர் ரூபா 9,174 மில்லியன் ஆக திருத்தியமைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தின் கீழ் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த பின்னர் கூட அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், விதி மற்றும் வீதி தோற்புயங்களின் அகலத்தினை விரிவாக்கல் காரணமாக மதகுகள், பாலங்களினை அகலப்படுத்துதல், தடுப்புச் சுவர்களின் நிர்மாணிப்புக்கு ரூபா 1,002 மில்லியன் பெறுமதியான 04 மாறுபட்ட கட்டளைகளினை செயற்திட்டம் அங்கீகரித்திருந்தது. மேலும் நுழைவிற்கான வீதி புனரமைப்பு மீதான மேலதிக வேலைகள் ரூபா 12.87 மில்லியன் கிரயமொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வடிவமைப்பு கட்டத்தில் முறையான தள மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், மேற்குறித்த மேலதிக செலவினங்களினை இழிவுபடுத்த முடியுமாக இருந்திருக்கும்.

(ஆ) முறையான விபரமான பொறியியல் திட்டங்கள் மற்றும் கிரய மதிப்பீடுகளின்றி மஹியங்கன – திம்புலாகல – துலக்கன வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்

விளைவான ரூபா 2,202 மில்லியன் கிரயமொன்றாக அது காணப்பட்ட போதிலும், ரூபா 1,746 மில்லியன் கிரயமொன்றில் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், கருதுகோள் வடிவமைப்புக்கள் தயாரிக்கப்பட்ட கணியச் சிட்டையின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்பாடுகள் சில வெட்டிக்குறைக்கப்பட கூடியதாகவிருந்தது.

(இ) வேலைகளின் மூல நோக்கத்தினுள் உள்ளடக்கப்பட்டிராத 11 பாலங்களின் மேலதிக வேலைகள் மற்றும் நிர்மானம் காரணமாக, நாகொட – கலாவெவ – பெல்லப்பிட்டிய வீதியின் முன்னேற்றம் மற்றும் புனரமைப்பு மீதான ரூபா 3,623 ஆன மதிப்பிடப்பட்ட உண்மை கிரயம் ரூபா 4,122 மில்லியன் வரை திருத்தியமைக்கப்பட்டிருந்தது. மேலும், மேலதிக செயற்பாடுகளின் காரணமாக ஒப்பந்தத்தின் கீழ் வேலைகளினை பூர்த்திசெய்வதற்கு 287 நாட்களுக்கு செயற்திட்டத்திற்கு நீடிப்புக்கள் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், கணியச் சிட்டையின் உள்ளடங்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட மாறுபாடுகளுக்கு 2015 திசெம்பர் 31 வரையேனும் தொடர்புடைய அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதுல்ல – கரமெடிய – அன்டயுள்பொத வீதியின் முன்னேற்ற மற்றும் புனரமைப்பு வேலைகள் மீதான ரூபா 3,370 மில்லியன் மதிப்பிடப்பட்ட உண்மை கிரயம் மேலதிக வேலைகள் காரணமாக ரூபா 5,073 மில்லியன் வரை மீளமைக்கப்பட்டிருந்தது. கருதுகோல் வடிவமைப்பு அடிப்படையிலான கணியச் சிட்டையின் தயாரிப்பு காரணமாக, மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு மேலதிகமாக 50.53 சதவீதத்தினால் நிர்மானக் கிரயம் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(உ) அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 8.13.4 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது வீதிகளின் நுழைவுகள் மற்றும் மஹியங்கனையிலுள்ள ஜனாதிபதி பெங்ளோயின் உள்ளக வீதிகள் மற்றும் மஹியங்கனையிலுள்ள சேவை வீதிகளின் புனரமைப்பின் முன்னேற்றங்கள் உள்ளடங்களாக பிபில – உரனிய – மஹியங்கன வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் மீதான மேலதிக வேலைகள் ரூபா 206 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்நது. புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் ரூபா 185 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்டடிருந்ததுடன் யதார்த்தமான முறையொன்றில் கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கமையை அது நிருபிக்கின்றது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்ததாரரினால் சமர்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் தாமதமான தீர்ப்பனவு காரணமாக, ஒப்பந்த நிபந்தனையின் 14.8 உப கூற்றின் பிரகாரம் செயற்திட்டத்தினால் ஐ.அ.டொலர் 393,307 மற்றும் ரூபா 229.27 மில்லியன் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய பெறுகைகள் முகவரின் ஆலோசனை சேவைகள் கையேடு – 2007 இன் 1.2.1 ஆம் இலக்க கூற்றின் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தனித்தனியாக ஆலோசகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், வீதி வலையமைப்பு முன்னுரிமை முன்னேற்றம் செயற்திட்டம் - 03 இற்கு நியமிக்கப்பட்ட ஆலோசகர்களின் சேவைகள் இந்த செயற்திட்டத்தினால் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் வழங்கப்பட்ட சேவைகளினை பிரித்துக்காட்டிராது இந்த செயற்திட்டத்திற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 95.55 மில்லியன் கூட்டுத்தொகையான ஆலோசனைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட கடன் வருமானத்தில், செயற்திட்டத்தின் கீழ் செயற்பாடுகளினை நடாத்திச் செல்லுவதற்கு ரூபா 1,100 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீள் செலுத்துகைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.